வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022-23

நேரம் : 2.30 மணி]

## சமூக அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக. 14x1=14

1. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?
அ) நெதர்லாந்து (டச்சு) ஆ) போர்ச்சுகல் இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன்
2. இண்டிகோ (அவுரி) கிளர்ச்சி யாரால் தலைமையேற்று நடத்தப்பட்டது?
அ) மகாத்மா காந்தி ஆ) கேசப் சந்திர ராய்
இ) திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு பிஸ்வாஸ் ஈ) சர்தார் வல்லபாய் பட்டேல்
3. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:
அ) கட்டபொம்மன் ஆ) ஊமைத்துரை இ) செவத்தையா ஈ) திப்பு சுல்தான்
4. ------ தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.
அ) நெசவு ஆ) எஃகு இ) மின்சக்தி ஈ) உரங்கள்
5. ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட கடலோர நகரம் / நகரங்கள்.
அ) சூரத் ஆ) கோவா இ) பம்பாய் ஈ) மேற்கண்ட அனைத்தும்
6. ----- என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.
அ) காற்றுமானி ஆ) அழுத்தமானி இ) ஈரநிலைமானி ஈ) வெப்பமானி
7. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றையும் காரணத்தையும் ஆராய்க.
கூற்று : நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.
காரணம் : கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல.
அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஈ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
8. இந்தியப் பெருங்கடலில் சுனாமி ---- ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
அ) 1990 ஆ) 2004 இ) 2005 ஈ) 2008
9. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை -----
அ) கேப் பிளாங்கா ஆ) அகுல்காஸ் முனை
இ) நன்னம்பிக்கை முனை ஈ) கேப்டவுன்
10. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது
அ) 62 ஆ) 64 இ) 65 ஈ) 58
11. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு
அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967
12. ஐ.நா.சபை 1979 ஆம் ஆண்டை ---- சர்வதேச ஆண்டாக அறிவித்தது
அ) பெண் குழந்தைகள் ஆ) குழந்தைகள் இ) பெண்கள் ஈ) இவற்றில் எதுவுமில்லை
13. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன?
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வெண்கலம் ஈ) மேற்கூறிய அனைத்தும்
14. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
முதலீட்டுக் கருவி போன்றவைகள்
அ) பங்கு வர்த்தகம் ஆ) பத்திரங்கள் இ) பரஸ்பர நிதி ஈ) வரி செலுத்துவது

II. சரியா/ தவறா எனக் குறிப்பிடுக. 5x1=5

15. காரன் வாலிஸ் பிரபு காவல் துறையை உருவாக்கினார்
16. 1799 அக்டோபர் 17 ஆம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.
17. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகிறது
18. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிய அளவு காரணமாக உள்ளன.
19. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 33 கட்டாய வினா 10x2=20

20. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?
21. நிரந்தர நிலவரி திட்டத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
22. தட்சசீலம் பற்றி சிறு குறிப்பு வரைக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

23. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
24. மண்ணின் வகைகளைக் கூறுக.
25. காலநிலை – வரையறு?
26. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கிய காரணங்கள் யாவை?
27. ஆஸ்திரேலியாவின் பொருளாதார நடவடிக்கைகள் ஏதேனும் நான்கினைக் கூறுக.
28. 1955 ஆம் ஆண்டு இந்திய குடியுரிமைச் சட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?
29. சமயச்சார்பின்மை என்பது எதனைக் குறிக்கிறது?
30. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பின் (UDHR) முக்கயத்துவத்தை எழுதுக.
31. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது யார்?
32. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?
33. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?

**IV. கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் 9 வினாக்களுக்கு விரிவான விடையளி (வினா எண் 47 கட்டாய வினா)** 9x5=45

34. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    1. புதிய கல்விக் கொள்கை திருத்தப்பட்ட ஆண்டு -------
    2. ------ என்பது கிராம்ப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்.
    3. அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் -------
    4. பிரிவு 15, சமயம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் ------- காட்டுவதைத் தடை செய்கிறது.
    5. நிகழ்நிலை வங்கியை ------ என்று அழைக்கலாம்.

35. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) ஆங்கிலேயர்கள் | – | நீர் உட்கசிந்து வெளியிடுதல் |
| ஆ) ஜான்சி | – | ஒற்றைக் குடியுரிமை |
| இ) தாவரங்கள் | – | 1600 |
| ஈ) இந்திய அரசியலமைப்பு | – | திரு. உதயகுமார் |
| உ) இந்திய நாணயம் | – | லட்சுமி பாய் |

36. **வேறுபடுத்துக.**
    அ) காலநிலை மற்றும் வானிலை
    ஆ) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்
    **காரணம் கூறு.**
    அ) எகிப்து நைல் நதியின் நன்கொடை என அழைக்கப்படுவது ஏன்?
37. இரண்டாம் கர்நாடக போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக?
38. 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
39. தேசியக் கல்விக் கொள்கை பற்றி விவரி?
40. வெப்பநிலை எவ்வாறு அளவிடப்படுகிறது?
41. நகரமயமாக்கலினால் ஏற்படும் சவால்களை ஆராய்க.
42. தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப்படம் மூலம் விளக்குக.
43. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?
44. சமயசார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?
45. பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?
46. பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?
47. **கீழ்க்காணும் இடங்களை <u>உலக வரைபடத்தில்</u> குறிக்கவும்.**
    அ) ஆப்பிரிக்கா ஆ) ஆஸ்திரேலியா இ) டோக்கியோ
    ஈ) பசிபிக் பெருங்கடல் உ) சகாரா பாலைவனம்

**V. கீழ்க்காணும்அனைத்து வினாக்களுக்கு விடையளி** 2x8=16

48. அ) மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சியைப் பற்றி எடுத்துரைக்கவும்.


**(அல்லது)**

ஆ) மண்ணினை வகைப்படுத்தி விவரிக்கவும்.

49. கீழ்க்காணும் இடங்களை <u>இந்திய வரைபடத்தில்</u> குறிக்கவும். (ஏதேனும் 8 இடங்கள் மட்டும்)
    அ) புதுடெல்லி ஆ) பம்பாய் இ) கல்கத்தா ஈ) மதராஸ் உ) கள்ளிக்கோட்டை
    ஊ) லக்னோ எ) விக்கிரமசீலா ஏ) அகமதாபாத் ஐ) அஸ்ஸாம் ஒ) ஜாம்ஷெட்பூர்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com


WORLD

